<u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

**IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI**
**KRISHNAGIRI DISTRICT**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | **:** | O.S.No. 56 of 2020 | **CNR No.** | **:** | TNKI13-000084-2020 |
| **Name** | **:** | அன்பு | **Husband Name** | **:** | லேட். ரங்கன் |
| **Witness for** | **:** | Defendant | **Calling** | **:** | DW1 |
| **Age** | **:** | 56 | **Village** | **:** | கே. பாப்பாரப்பட்டி |
| **Taluk** | **:** | ஊத்தங்கரை | **District** | **:** | கிருஷ்ணகிரி |
| **Start Time** | **:** | 03.00 PM | **End Time** | **:** | 03.50 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 07.04.2025 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

(1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3 பிள்ளைகள், அவர்கள் சீலா, ஐயப்பன், சுதன் ஆவார்கள். சீலா மற்றும் ஐயப்பன் பட்டதாரிகள் என்றால் சரிதான். சுதன் வழக்கறிஞராக உள்ளார் என்றால் சரிதான். (**பிரதிவாதி தரப்பில் இந்த கேள்வியானது தொடர்பில்லாத கேள்வி என்று ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. வழக்கு பொருண்மைகள் குறித்து மனு சங்கதிகளில் வழக்கு சம்பந்தமான மற்றும் தரப்பினர்களின் உறவுமுறைகளை தெரியப்படுத்தும் வண்ணம் இருப்பதால் கேள்வி அனுமதிக்கப்படுகிறது.**) இந்த வழக்கிற்கு அவர்தான் ஆஜராகி வருகிறார் என்றால் இல்லை, முருகன் என்ற வழக்கறிஞர் ஆஜராகி வருகிறார். இந்த வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜர் ஆக எனக்கு அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. அழைப்பாணை வாங்கிவிட்டு 11.11.2020-ம் தேதி நீதிமன்றத்தில்

ஆஜர் ஆகவில்லை என்றால் சரியல்ல, எனக்கு அழைப்பாணை வரவில்லை. வழக்கு தாக்கல் செய்த விவரம் எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் 5 வருடங்களாக தெரியும். 5 ஆண்டுகளாக வழக்கை நடத்தி வருகிறேனா என்றால் உடல் நிலை சரியில்லாத காரணத்தால் முழுமையாக நடத்த இயலவில்லை.

(2) என்ன பரிகாரம் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய சொத்தை தவறாக கிரையம் செய்துள்ளார் என்று அதற்கு நீதி வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன். என்ன காரணத்தினால் முதலில் இந்நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றால் எனக்கு இடுப்பில் அறுவைசிகிச்சை செய்திருந்தார்கள், அதனால் முதலில் ஆஜராக இயலவில்லை. எனக்கு உடல்நிலை குறைபாடானது வழக்கு நிலுவையில் இருந்த போது ஏற்பட்டதா என்றால் இல்லை, முன்பிருந்தே இருந்தது, ஆனால் வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் அறுவைசிகிச்சை நடந்தது. எனது பிள்ளைகளை நன்கு படிக்க வைத்துள்ளேன் என்றால் நான் வேண்டும் என்றே ஆஜர் ஆகாமல் இருந்துவிட்டேன் என்றும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(3) 1, 2 இன சொத்துக்கள் சொல்லும் நிலையில் என்னுடைய சொத்து எதுவென்றால் 2-ம் இன சொத்து எனதாகும். 1, 2 இன சொத்துக்கள் வாதியினுடைய தாத்தா கண்ணன் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்து அவர் வாதிக்கு தானசெட்டில்மெண்ட் மூலம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, தவறான எண் எழுதி கொடுத்துள்ளார், அது எனக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். 2-ம் இன சொத்து எனக்கு பாத்தியப்பட்டு இருந்திருந்தால் அழைப்பாணை பெற்ற உடன் ஆஜராகி வழக்கை

நடத்தியிருப்பேன் என்றும் அவ்வாறு இல்லாததால் தான் ஆஜராகவில்லை என்றால் சரியல்ல, உடல்நிலை சரியில்லாததால் தான் ஆஜராகவில்லை. தானம் பெற்ற நாள் முதல் வாதிதான் 1, 2 இன வழக்கு சொத்துக்களில் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல, நான் தான் அனுபவித்து வருகிறேன். வழக்கு 1, 2 இன சொத்துக்களுக்கு வாதியின் தாத்தாவான கண்ணன் பேரில் வருவாய்துறை ஆவணங்கள் இருந்தது என்றும் அதன் அடிப்படையில்தான் தானசெட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தார் என்றால் சரியல்ல. 2-ம் இன சொத்து குறித்து அது மோசடியான ஆவணமாக இருந்திருந்தால் வாதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றும் அவ்வாறு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எப்போது என் பெயரில் பட்டா கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் சுமார் 30 வருடங்களுக்கு முன்பு கொடுத்தார்கள். என் பெயரில் வழங்கப்பட்ட பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பட்டா, சிட்டா போன்ற வருவாய்துறை ஆவணங்கள் எனக்கு பட்டா கொடுக்கும் பொழுதே மாற்றப்பட்டதா என்றால் ஆமாம். **பி.வா.சா.ஆ.2** ஆவணமான **அ – பதிவேடு** 30 வருடங்களுக்கு முன்பு மாற்றப்பட்டுள்ளதா என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது, படித்துக்காட்டி கேட்டால் பதில் அளிக்க தயாராக உள்ளேன். 2-ம் இன சொத்தில் நான் வீடு கட்டி குடியிருந்து அனுபவித்து வருகிறேனா என்றால் ஆமாம். நான் மேற்படி வீட்டிற்கு மின்இணைப்பு வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன். நான் அனுபவத்தில் இல்லை என்றும் அதனால்தான் வீட்டின் கதவு எண்ணோ அல்லது மின்இணைப்பு எண்ணோ சொல்லவில்லை என்றால் சரியல்ல, அதற்கு கதவு எண்

இன்னும் வழங்கப்படவில்லை. எந்த சர்வே எண்ணிற்கு என் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் **சர்வே எண். 217/2, பட்டா எண். 17** ஆகும். என் பெயரில் வழங்கப்பட்ட அசல் பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அரசு வழங்கப்பட்டதாக சொல்லும் பட்டாவை நான் தாக்கல் செய்யவில்லை என்றும் அவ்வாறு எந்த பட்டாவும் வழங்கப்படாததால்தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2-ம் இன சொத்தில் நான் செல்வது போல் எந்த கட்டிடமும் இல்லை என்றும் பில்போர் அமைத்து நான் அனுபவித்து வரவில்லை என்றால் சரியல்ல. அனுபவித்து வருவதாக சொல்லும் நிலையில் கிராம நிர்வாக அலுவலரிடம் வரி கட்டி ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் வழக்கு சொத்து அனுபவத்தில் இல்லை என்றும், அதனால்தான் வரி ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு 2-ம் இன சொத்து வாதிக்கு சொந்தமானது என்றும் அதில் உரிமை கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல, அது எனக்கு பாத்தியப்பட்டதாகும். நான் 28.08.2020 தேதியில் காவல் கண்காணிப்பாளர், நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவில் கொடுத்த புகாரில் உண்மை இல்லை என்பதால் அது நிராகரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இரு தரப்பு ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதால்தான் எனது புகாரின் பேரில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது புகாரின் பேரில் நடந்த விசாரணையில் இரண்டு முறை அழைப்பாணை அனுப்பி அவர் ஆஜராகவில்லை என்று பொய்யாக சாட்டசியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, அவர் ஆஜராகவில்லை,

பின்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததாக தகவல் தெரிவித்தார். 2-ம் இன சொத்தில் 20 வருடங்களுக்கு முன்பு பால் கடைக்கு வாடகைக்கு விட்டிருப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியும், மாதுவும் தான் வாடகைக்கு விட்டு இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் நான் வாடகைக்கு விடாததால்தான் வாடகை ரசீதுகளை எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

(4) எனக்கு பட்டா வழங்கும் போது என்போல் எத்தனை நபர்களுக்கு கொடுத்தார்கள் என்றால் எண்ணிக்கை தெரியாது, ஆனால் கண்ணனுக்கும் கொடுத்தார்கள்.

(5) **வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

AMAR ANAND

District Munsif
Digitally signed by AMAR ANAND
Location: Uthangarai

District Munsif
Uthangarai